# DHEERAN IAS ACADEMY

# பொது அறிவுக் களஞ்சியம்

## நடப்பு நிகழ்வுகள்
## ஏப்ரல் - 2024














# நடப்பு நிகழ்வுகள் – ஏப்ரல் 2024

## தமிழ்நாடு

- கோவை விமான நிலையத்தில் 'டிஜி யாத்ரா' திட்டம் ஏப்ரல் இரண்டாவது வாரத்தில் தொடங்கப்பட உள்ளது
    - விமான நிலையங்களுக்கு வரும் பயணிகளின் காத்திருப்பு நேரத்தை குறைக்கும் பொருட்டு 'டிஜி யாத்ரா' திட்டம் கடந்த 2022 ஆண்டு தொடங்கப்பட்டது.
    - டிஜி யாத்திரை திட்டத்தின் கீழ், விமான நிலையங்களுக்கு வரும் பயணிகள், அடையாள அட்டை மற்றும் விமான நிலைய நுழைவுச் சீட்டு (போர்டிங் பாஸ்) ஆகிய காகித ஆவணங்களைக் கொண்டுவரத் தேவையில்லை. மாறாக, விமான நிலையத்துக்குள் நுழையும்போதும், பாதுகாப்பு சோதனை மற்றும் விமானத்தில் ஏறுவதற்கு முன்பும் அங்குள்ள பயணிகளை அடையாளம் காணும் கருவியில் தங்கள் முகத்தைக் காட்டினால் போதும். ஆனால் டிஜி யாத்திரை செயலியில் தங்கள் படம் உள்ளிட்ட விவரங்களை முன்கூட்டியே பதிவு செய்திருக்க வேண்டும்.

- வைக்கம் சத்தியாகிரகத்தின் 100வது ஆண்டு நிறைவு விழா மார்ச் 30 அன்று அனுசரிக்கப்பட்டது. கேரளாவின்(திருவிதாங்கூர்) வைக்கம் என்ற பகுதியில் கோவிலை சுற்றி தாழ்த்தப்பட்ட மக்கள் நடக்க உயர்சாதி மக்களால் தடைவிதிக்கப்பட்டது.
    - இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மார்ச் 30, 1924 -இல் வைக்கம் சத்தியாகிரகம் தொடங்கப்பட்டது.

- மதுரையில் ஜூன் 9ல் உலகத் தமிழ்ச் சங்கம், ஹைக்கூ கவிதையாளர்கள் இயக்கம், இனிய நந்தவனம் சார்பில் தமிழ் ஹைக்கூ மூன்றாவது உலக மாநாடு நடக்கிறது.

- இந்தியாவில் பொருளாதார அளவில் முன்னேறிய மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்தின், உள் மாநில உற்பத்தியை (GSDP) வைத்து அந்த மாநிலத்தின் பொருளாதார நிலையை அளவிடலாம்.
    - அந்த வகையில் இந்தியாவின் மகாராஷ்டிரா முதல் இடத்தில் உள்ளது. தொடர்ந்து தமிழ்நாடு, குஜராத், உ. பி. , கர்நாடகா, மேற்கு வங்கம், ஆந்திர பிரதேசம் ஆகிய

மாநிலங்கள் முதல் 7 இடங்களில் உள்ளன.

- முதல் கட்டமாக நடைபெற்ற 18 ஆவது மக்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டில் 69.72 சதவீத வாக்குகள் பதிவானதாக அதிகார்வப் பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

- விழுப்புரத்தில் திருநங்கைக ளுக்கான அழகி போட்டி நடைபெற்றது. இதில் ‘மிஸ்கூவாகம்-2024’ பட்டத்தை ஈரோட்டைச் சேர்ந்த ரியா வென்றுள்ளவர்.

- விலங்குகளின் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய ஓசூர் வனக்கோட்டத்தில் வனத் துறை சார்பில் 70 இடங்களில் தண்ணீர் தொட்டிகள் அமைக்கப் பட்டுள்ளன. இத்தொட்டிகளில் டிராக்டர் மூலம் தண்ணீரை விலைக்கு வாங்கி நிரப்பி வருகின்றனர்.
    - மேலும், பொதுமக்கள் பங்களிப்புடன் தண்ணீரை விலைக்கு வாங்கிப் பயன்படுத்த வனத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி, பிறந்த நாள் கொண்டாடுவோர் மற்றும் குடும்ப விழா நடத்துவோர், வன உயிரினங்களுக்குத் தண்ணீர் வழங்கி உதவிட வேண்டும் என வன உயிரின பாதுகாவலர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதன்படி, ரூ.1,500 செலுத்தி ஒரு டிராக்டர் தண்ணீரை ( 5 ஆயிரம் லிட்டர் ) வன உயிரினங்கள் பயன்பாட்டுக்கு அளிக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

- வரையாடுகள் குறித்து ஆய்வுகள் மேற்கொண்டு பல்வேறு புத்தகங்களை எழுதிய வனவிலங்கு பாதுகாவலரான ஈ.ஆர்.சி. தாவீதாரின் பிறந்தநாள்,( அக்டோபர் 7) கடந்த 2023-ம் ஆண்டுமுதல் நீலகிரி வரையாடுகள் தினமாக கொண்டாடப்படுகிறது.
    - நீலகிரி வரையாடு திட்டத்தின் கீழ் தமிழகம், கேரள வனப்பகுதிகளில் 4 புலிகள் காப்பகங்கள், 14 வனக் கோட்டங்களில் முதல்முறையாக வனத்துறை சார்பில் ஒருங்கிணைந்த வரையாடு கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகத்தில் ஏப்ரல் 29, 30, மே 1 ஆகிய 3 நாட்கள் வரையாடு கணக்கெடுப்பு நடக்கிறது.

- புகழ்பெற்ற கொடைக்கானல் சோலார் அப்சர்வேட்டரியின் (KSO) 125வது ஆண்டு விழா, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் (DST) தன்னாட்சி நிறுவனமான இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் அஸ்ட்ரோபிசிக்ஸ் (IIA) மூலம் 1 ஏப்ரல் 2024 அன்று கொண்டாடப்பட்டது.
    - 1899 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதி நிறுவப்பட்டது.

DHEERAN IAS ACADEMY

- நீதிபதி சந்துரு குழு
    - பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களிடையே ஏற்படும் சாதிய மோதல்களைத் தடுப்பதற்காக அமைக்கப்பட்ட ஓய்வு பெற்ற நீதிபதி சந்துரு தலைமையிலான ஒரு நபர் குழுவின் பதவிக்காலம் பிப்ரவரி மாதம் இறுதியுடன் முடிவடைந்த நிலையில், குழுவின் பதவிக் காலத்தை மே இறுதிவரை நீட்டிப்பு செய்து அரசு உத்தரவிட்டுள்ளது.

- இந்திய கடலோரக் காவல்படையின் இயக்குநர் ஜெனரல் ராகேஷ் பால், தமிழ்நாடு, ராமேஸ்வரம் அருகே உள்ள ICGS மண்டபத்தில் இந்திய கடலோர காவல்படை நீர்வாழ் மையத்தைத் திறந்து வைத்தார்.

- பரம்வீர் சக்ரா தோட்டம்
    - தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி தாம்பரத்தில் உள்ள காஞ்சி மகாஸ்வாமி வித்யா மந்திரில் பரம்வீர் சக்ரா தோட்டம் மற்றும் ஐக்யம் கண்காட்சியை திறந்து வைத்தார்.

- கள்ளக்குறிச்சி மாவட்டம், வானவரெட்டி என்ற ஊரில், 13ம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டு கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## இந்தியா

- ஒரு காலை இழந்த உடல் ஊனமுற்ற 35 வயதான உதய் குமார், மேற்கு சிக்கிமில் 16,500 அடி உயரத்தில் உள்ள ரெனாக் மலையின் உச்சியை அடைந்து சாதனை படைத்துள்ளார்.
    - 2013 ஆம் ஆண்டு எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்த உலகின் முதல் மாற்றுத்திறனாளி பெண் அருணிமா சின்ஹா.
    - தேசிய மலை ஏறும் தினம் – ஆகஸ்ட் 1

DHEERAN IAS ACADEMY

- இந்திய விமானப்படையின் மிகப்பெரிய ராணுவப்பயிற்சியான “ககன் சக்தி” ஜெய்சால்மர் மாவட்டத்தில் உள்ள பொக்ரான் ஃபீல்ட் ஃபயர் ரேஞ்சில் ஏப்ரல் 1 அன்று தொடங்கியுள்ளது. இந்த பயிற்சி ஏப்ரல் 10-ம் தேதி வரை நடைபெறும்.இப்பயிற்சியில் விமானப்படையின் அனைத்து முக்கிய போர் விமானங்களும், நவீன ஹெலிகாப்டர்களும் தங்களது தாக்கும் திறனை வெளிப்படுத்தி வருகின்றன.
    - கடைசியாக இந்த “ககன் சக்தி” போர் பயிற்சி 2018 ஆம் ஆண்டில் நடைபெற்றது.

- சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் வெளியிட்டுள்ள இந்திய காசநோய் அறிக்கை 2024-யின் படி, 2015 ஆண்டு முதல் காசநோய் பாதிப்பு சுமார் 16% சதவீதமும் மற்றும் காச நோயால் ஏற்படும் உயிரிழப்பு விகிதம் சுமார் 18% சதவீதமும் குறைந்துள்ளது.
    - காசநோய் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த 1992ஆம் ஆண்டுமுதல் உலக காசநோய்

தினம் உலக சுகாதார அமைப்பால் மார்ச் 24 அன்று கடைப்பிடிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.
- உலகளாவிய இலக்கான 2030 ஐ விட ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு 2025 ஆம் ஆண்டுக்குள் காசநோயை ஒழிக்க இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.

➢ 2024-ம் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.5 சதவீதமாக இருக்கும். ஆனாலும், 2025-ம் நிதியாண்டில் குறிப்பிட்ட காலத்துக்கு வளர்ச்சி 6.6 சதவீதம் என்ற அளவில் மிதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.
- கடந்த நிதியாண்டு 2023 -இல் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 8.4 சதவீதமாக இருந்தது.

➢ சமீபத்தில் நடைபெற்ற RBI-இன் நிதிக்கொள்கை கூட்டத்தில் ரெப்போ வட்டி விகிதத்தில் தொடர்ந்து 7வது முறையாக மாற்றம் செய்யப்படவில்லை, அது 6.5 சதவீதமாகவே நீடிப்பதாக ரிசர்வ் வங்கி கவர்னர் சக்திகாந்த தாஸ் தெரிவித்துள்ளார்.
- ரெப்போ விகிதம் என்பது மற்ற வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம் ஆகும்.
- இந்திய ரிசர்வ் வங்கி 1935, ஏப்ரல் 1 ஆம் தேதி நிறுவப்பட்டது .
- இதன் தளமையாகம் 1937 இல் கொல்கத்தாவில் இருந்து மும்பைக்கு மாற்றப்பட்டது.
- 1949 இல் தேசியமயமாக்கப்பட்டது.

➢ 21வது பயோ ஆசியா மாநாடு ஹைதராபாத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் ஒரு சுகாதாரம், சுகாதாரப் பாதுகாப்பில் உள்ள சீர்குலைக்கும் தொழில்நுட்பங்கள் மற்றும் அனைவருக்கும் சுகாதாரப் பாதுகாப்பில் வசதிகளை அணுகக் கூடிய தன்மை மற்றும் மலிவுத்தன்மை ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டன.
- இந்த மாநாட்டின் கருத்துரு: Data and AI: Redefining Possibilities

➢ மகாராஷ்டிரா மாநிலத்தின் மீரஜ் நகரில் தயாரிக்கப்படும் சிதார், தம்புரா போன்ற இசைக்கருவிகளுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

➢ இந்தியாவின் மேகாலயா மாநிலத்தில் “Butterfly Cicadas” என்று குறிப்பிடப்படும் புதிய வகை சில்வண்டு வண்ணத்துப் பூச்சிக்களை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- பெக்குவார்டினா பைகலர் *(Becquartina Bicolour*) எனப்படும் இந்தப் புதிய சில்வண்டு வண்ணத்துப்பூச்சி இனமானது இந்தியாவில் முதல் முறையாகப் பதிவான பெக்குவார்டினா இனத்து வண்ணத்துப்பூச்சி ஆகும்.

➢ உத்தரபிரதேசத்தில் உள்ள புந்தேல்கண்ட் பகுதியைச் சேர்ந்த கத்திய கெஹு (கோதுமை) அப்பகுதியில் உள்ள பண்ணை விளைபொருளுக்கான முதல் புவியியல் குறியீடை (ஜிஐ) பெற்றுள்ளது.

- மரங்களை நோயிலிருந்து பாதுகாக்கவும், பசுமைச் சொத்துக்களை மேம்படுத்தவும், புது தில்லி முனிசிபல் கவுன்சில் (NDC) அதன் பகுதியில் உள்ள மரங்களுக்கு முறையான சிகிச்சை அளிப்பதற்காக 'ட்ரீ ஆம்புலன்ஸ்' வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.

- ஆந்திராவில் பிறந்து வளர்ந்து அமெரிக்காவில் பணியாற்றும் கோபிசந்த் என்ற இளைஞர் சுற்றுலாப் பயணியாக விண்வெளிக்கு செல்ல உள்ளார். இதன்மூலம் சுற்றுலாப் பயணியாக விண்வெளிக்கு செல்லும் முதல் இந்தியர் என்ற பெருமையை கோபிசந்த் பெறவுள்ளார்.
    - ப்ளூ ஆரிஜின் எனும் விண்வெளி நிறுவனம் நியூ ஷெப்பர்டு-25 (என்எஸ்-25) என்ற திட்டத்தின் கீழ் 6 பேரை விண்வெளிக்கு சுற்றுலா அனுப்புகிறது. இந்த சுற்றுலாப் பயணிகளில் ஆந்திர இளைஞர் கோபிசந்தும் இடம்பெற்றுள்ளார்.
    - இதற்கு முன்னர், இந்திய விமானப் படை விமானியான ராகேஷ் சர்மா, 1984-ல் விண்வெளிக்கு பயணம் செய்த முதல் இந்தியர் என்ற பெருமையை பெற்றார். இவரை தொடர்ந்து, கல்பனா சாவ்லா, சுனிதா வில்லியம்ஸ், ராஜாச்சாரி, சிரிஷா பண்ட்லா என இந்திய வம்சாவளியினர் தொழில்ரீதியாக விண்வெளிக்கு சென்றுள்ளனர்.

- உத்திரப் பிரதேசம் மாநிலம் கதியா கேஹு (Kathiya Gehu) என்ற கோதுமை வகைக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

- உலகின் மிகவும் உயரமான போர்க்களம் என அறியப்படும் சியாச்சினில், இந்திய ராணுவம் முகாம் அமைத்து, 40 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.
    - கடல் மட்டத்தில் இருந்து, 18,875 அடி உயரத்தில் உள்ள சியாச்சின் பனிச்சிகர பகுதியை, 1984 ஏப்ரல் 13ல், 'ஆப்பரேஷன் மேக்துாத்' என்ற பெயரில், நம் ராணுவம் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது.
    - நேற்றுடன், சியாச்சினில் ராணுவம் அமைக்கப்பட்டு, 40 ஆண்டுகள் நிறைவடைந்தன.

- மாதவ்பூர் மேளா or மாதவ்பூர் கெட் கண்காட்சி என்பது ஒவ்வொரு வருடமும் ராம நவமியன்று குஜராத்தில் தொடங்கும் ஒரு கலாச்சார விழாவாகும்.
    - போர்பந்தரின் மாதவ்பூர் கிராமத்தில் 5 நாள் நடைபெறும் இந்த கண்காட்சியை குஜராத் கவர்னர் ஆச்சார்யா தேவ்வ்ரத் தொடங்கி வைத்தார்.
- 62.8 செ.மீ உயரமுள்ள ஜோதி ஆம்ஜி பிரிமார்டையல் டுவார்ப்பிஸம் (Primordial dwarfism) என்னும் அரிய மரபணுவால் பாதிக்கப்பட்டுள்ளார்.
    - ருமேசா கெல்கி – உலகின் உயரமான பெண்

- இந்தியாவின் முதல் ஹைபிரிட் பிட்ச் கிரிக்கெட் ஸ்டேடியம் (Hybrid Cricket Stadium) தர்மசாலாவில் (ஹிமாச்சல பிரதேசம்) அமைக்கப்பட்டுள்ளது.

- உத்திர பிரதேசத்தில் புதிதாக 13 பொருட்களுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
    - இதன் மூலம் 75 பொருட்களுக்கு புவிசார் குறியீடு வழங்கி புவிசார் குறியீட்டில் முதலிடம் பிடித்துள்ளது.

- 100 ஆண்டுகளுக்குப் பிறகு அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகத்தின் (AMU) முதல் பெண் துணைவேந்தராக நைமா கட்டூன் (Naima Khatoon) நியமிக்கப்பட்டுள்ளார்.
    - முன்னதாக 1920-ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்தின் வேந்தராக பேகம் சுல்தான் ஜஹான் என்ற பெண் நியமிக்கப்பட்டார். இந்நிலையில் 100 ஆண்டுகளுக்குப் பிறகு பெண் ஒருவர் துணைவேந்தராக நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

- வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது சுதந்திரப் போராட்ட வீரர்களால் ஒரு கருத்தை நிரூபிக்க விற்கப்பட்ட காசியின் புகழ்பெற்ற 'திரங்கி பர்ஃபி' என்ற மூவர்ண இனிப்பு வகைக்கு சமீபத்தில் புவிசார் குறியீடு வழங்கப்பட்டது, மேலும் உத்தரப் பிரதேசத்தை சார்ந்த ஐந்து பொருள்களுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
    - பனாரஸ் உலோக வார்ப்பு கைவினைப் பொருள்,
    - லக்கிம்பூர் கெரி தாரு பூவேலைப்பாடுகள்,
    - பரேலி கரும்பு மற்றும் மூங்கில் கைவினைப் பொருள்,
    - பரேலி சர்தோசி கைவினைப் பொருள், மற்றும்
    - பில்குவா கை அச்சு வேலைப்பாடுகளுடன் தயாரிக்கப்படும் துணிகள்.
    - தற்போது வழங்கப்பட்டுள்ள ஆறு பொருள்களையும் சேர்த்து இதுவரை மொத்தம் 75 பொருள்களுக்கு புவிசார் குறியீடு பெற்றுள்ளது உத்தரப் பிரதேசம். இதன்மூலம் அதிக புவிசார் குறியீடு பெற்றுள்ள மாநிலங்கள் பட்டியலில் முதல் இடத்தில் உத்தரப் பிரதேசம் உள்ளது.
    - இரண்டாவது இடத்தில் 58 பொருள்களுக்கு புவிசார் குறியீடு பெற்று இரண்டாம் இடத்தில் தமிழ்நாடு உள்ளது குறிப்பிடத்தக்கது.

- கௌதம் அதானி தலைமையிலான குழு மார்ச் 28 அன்று குஜராத்தில் உள்ள முந்த்ராவில் உலகின் மிகப்பெரிய ஒற்றை- இருப்ப தாமிர உற்பத்தி ஆலையின் முதல் கட்டத்தைத் தொடங்குவதாக அறிவித்ததுள்ளது, இது இந்தியாவின் இறக்குமதியின் மீது சார்ந்திருப்பதைக் குறைக்க உதவும்.

- AI-அடிப்படையிலான திரைப்படம் - IRAH இந்தியாவின் முதல் AI-அடிப்படையிலான திரைப்படம், "IRAH", இந்திய திரைப்படத் துறையில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைப் பிரதிபலிக்கிறது, இது செயற்கை நுண்ணறிவின் சிக்கல்கள் மற்றும் தாக்கங்களை புதுமையான திரைப்படத் தயாரிப்பு நுட்பங்கள் மூலம் ஆராய்கிறது.
    - தென்னிந்தியாவின் முதல் AI செய்தி வாசிப்பாளர் சௌந்தர்யா – கர்நாடகா
    - இந்தியாவின் முதல் AI செய்தி வாசிப்பாளர் - லிசா –ஒடிசா

- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் (NHAI) 'One Vehicle, One FASTag' முன்முயற்சி ஏப்ரல் 1, 2024 திங்கட்கிழமை முதல் செயல்படுத்தப்பட்டது.
    - இது ஒரே FASTagஐப் பல வாகனங்களுக்கு பயன்படுத்துதல் அல்லது ஒரு வாகனத்துடன் பல ஃபாஸ்டேக்குகளை இணைத்தல் ஆகியவற்றை தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஏப்ரல் 5 அன்று, யூனிஃபைட் பேமெண்ட்ஸ் இன்டர்ஃபேஸ் (UPI) மூலம் ரொக்க வைப்பு இயந்திரங்களில் (CDM) பணத்தை டெபாசிட் செய்யும் வசதியை தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
    - RBI கவர்னர் - சக்திகாந்த தாஸ்
    - RBI தொடங்கப்பட்ட ஆண்டு 1935
    - RBI தலைமையகம் கொல்கத்தாவில் இருந்து மும்பைக்கு மாற்றப்பட்ட ஆண்டு 1937
    - RBI தேசியமயமாக்கப்பட்ட ஆண்டு 1947

- பாரதீப் துறைமுகம்
    - ஒடிசாவில் உள்ள பாரதீப் துறைமுகம் 2023-24 நிதியாண்டில் 145.38 மில்லியன் மெட்ரிக் டன் (எம்எம்டி) சரக்கு உற்பத்தியுடன், குஜராத்தின் காண்ட்லாவில் உள்ள தீன்தயாள் துறைமுகத்தை கடந்த 16-ஆம் ஆண்டுக்கான சாதனையை முறியடித்து, நாட்டின் அதிக சரக்கு கையாளும் பெரிய துறைமுகமாக மாறியுள்ளது.

- நெப்டிஸ் ஃபிலிரா (Neptis Philyra என்ற அரிய வகை பட்டாம்பூச்சி இனம், இந்தியாவில் முதல் முறையாக அருணாச்சல பிரதேசத்தின் கீழ் சுபன்சிரி மாவட்டத்தில் உள்ள டேல் பள்ளத்தாக்கு வனவிலங்கு சரணாலயத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

DHEERAN IAS ACADEMY

- இன்றுவரையில், கிழக்கு சைபீரியா, கொரியா, ஜப்பான், மத்திய மற்றும் தென்மேற்கு சீனா உள்ளிட்ட கிழக்கு ஆசியாவின் பல்வேறு பகுதிகளில் இந்த வண்ணத்துப் பூச்சி இனங்கள் காணப் படுவதாக அறியப்பட்டது.

➢ தனியார் வங்கியான ஹெச்டிஎஃப்சி வங்கி,

- லட்சத்தீவில் உள்ள கவரட்டி தீவில் ஒரு கிளையைத் திறந்துள்ளது.
- யூனியன் பிரதேசத்தில் கிளையைக் கொண்ட ஒரே தனியார் துறை வங்கி இதுவாகும்.

➢ தெலுங்கானா மாநிலம், முலுகு மாவட்டத்தின் எஸ்எஸ் தட்வாய் மண்டலத்தில் உள்ள பந்தலா கிராமத்திற்கு அருகில் உள்ள ஊரகுட்டா என்ற இடத்தில், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் குழு தனித்தன்மை வாய்ந்த இரும்பு காலத்தை சேர்ந்த மெகாலிதிக் தளத்தைக் கண்டுபிடித்ததாகக் கூறியுள்ளனர்.

➢ ஏப்ரல் 2024 இல், இந்திய வரலாற்று ஆவண ஆணையம்' (IHRC) அதன் புதிய இலச்சினை மற்றும் "யத்ர இதிஹாசம் பவிஷ்யம் ப்ரசக்ஷாந்தஹ் என்ற முழக்கத்தை வெளியிட்டது.

- அதன் இலச்சினையில் தாமரை இதழ் வடிவ பக்கங்கள் மற்றும் சாரநாத் தூண் ஆகியவை இடம்பெற்றுள்ளது.

➢ இந்தியாவின் தலைசிறந்த விமான நிறுவனமான இண்டிகோவின் தாய் நிறுவனமான இண்டர்குளோப் எண்டர்பிரைசஸ் மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த ஆர்ச்சர் ஏவியேஷன் ஆகியவை 2026 ஆம் ஆண்டில் இந்தியாவில் அனைத்து மின்சார விமான டாக்ஸி சேவையைத் தொடங்கவுள்ளது.

## வெளிநாட்டு நிகழ்வுகள்

➢ கனடா நாட்டில் பள்ளிக் குழந்தைகளுக்குத் தேசிய உணவுத் திட்டத்தினை அறிமுகம் செய்து வைக்கப்போவதாக அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்துள்ளார்.

- தமிழக அரசு 1 வகுப்பு முதல் 5 வகுப்பு வரையிலான அரசு பள்ளி மாணக்கர்களுக்கு காலையில் உணவு வழங்க முதல்வரின் காலை உணவுத் திட்டத்தை 15.09.2022 அன்று தொடங்கியது குறிப்பிடத்தக்கது.

➢ ஆப்பிரிக்க நாடான காங்கோ (Democratic Republic of Congo) நாட்டின் புதிய பிரதமராக ஜூடித் சுமின்வா துலுகா -வை நியமித்துள்ளார் அந்நாட்டின் குடியரசு தலைவர் ஃபெலிக்ஸ் சிசெகெடி.

- இதன் மூலம் ஆப்பிரிக்க நாடுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதல் பெண் என்ற பெருமையை ஜூடித் சுமின்வா துலுகா பெற்றுள்ளார்.
- சமியா சுலுகு ஹசன் தான்சானியா நாட்டின் முதல் பெண் அதிபர் என்பது.

➢ எகிப்தின் அதிபராக 3வது முறையாக அப்தெல் ஃபத்தா அல்-சிசி பதவியேற்றுள்ளார். இவர்

2030ஆம் ஆண்டு வரை அதிபராக தொடர்வார்.

- குறுகிய காலத்தில் பெருகக் கூடிய கொரோனா வைரஸ்களை கண்டறிந்து கண்காணிப்பதற்காக உலக சுகாதார நிறுவனம் (WHO) CoViNet என்ற உலகளாவிய கொரோனா வைரஸ் நெட்வொர்கை தொடங்கியுள்ளது.

- பாகிஸ்தானில் எக்ஸ் தளத்துக்கு தற்காலிக தடை விதித்து அந்நாட்டு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. தேசிய பாதுகாப்பு கருதி எடுக்கப்பட்ட முடிவு என இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றத்தில் அந்நாட்டு அரசு விளக்கம் அளித்துள்ளது.

- 2024ஆம் ஆண்டுக்கான உலக அழகிப் பட்டத்தை செக் குடியரசு நாட்டைச் சேர்ந்த கிறிஸ்டினா பிஸ்கோவா என்ற பெண் வென்றுள்ளார்.

- உலக வங்கி குழுமம் அதன் பொருளாதார ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) முன்னாள் துணை கவர்னர் ராகேஷ் மோகனை நியமித்துள்ளது.

- சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் 'myCGHS' செயலியை இன்று அறிமுகப்படுத்தியுள்ளது.
  - மத்திய அரசின் சுகாதாரத் திட்டத்தின் (CGHS)
  - பயனாளிகளுக்கான மின்னணு சுகாதாரப் பதிவுகள், தகவல் மற்றும் ஆதாரங்களுக்கான அணுகலை மேம்படுத்துவதற்காக இந்த செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.

- ஜிம்பாப்வே நாடு "ஜிம்பாப்வே தங்கம்" என்பதன் சுருக்கமான **ZiG** என்ற புதிய தங்க ஆதரவு நாணயத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

- சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நிர்வாகக் குழுவானது இரண்டாவது ஐந்தாண்டு காலத்திற்கு Kristalina Georgieva வை நிர்வாக இயக்குநராகப் புதுப்பித்துள்ளது.

- அமெரிக்க மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கையின்படி 65,960 இந்தியர்கள் முறையான அனுமதி பெற்று அமெரிக்க குடிமக்களாக மாறியுள்ளனர். அதன்படி மெச்சிகோவுக்கு அடுத்தபடியாக இந்தியர்கள் 2-வது இடத்தில் உள்ளனர்.

DHEERAN IAS ACADEMY

# வெளிநாட்டு உறவுகள்

- இந்தியா – அமெரிக்கா நாடுகளுக்கிடையேயான கடலோரக் காவல்படையின் கூட்டுப் பயிற்சியான Sea Defenders – 2024” நடைபெற்றது.

- செழுமைக்கான இந்திய-பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பு (IPEF) அதன் முதல் தூய்மையான பொருளாதார முதலீட்டாளர் மன்றத்தை ஜூன் 5-6 தேதிகளில் சிங்கப்பூரில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று வர்த்தகத் துறை தெரிவித்துள்ளது.
    - IPEF – Indo-Pacific Economic Framework for Prosperity
    - தூய்மையான பொருளாதார முதலீட்டாளர் மன்றம் – Clean Economy Investor Forum
    - மே 2022 இல் தொடங்கப்பட்டது, செழுமைக்கான இந்திய-பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பு (IPEF) 14 கூட்டாளர்களைக் கொண்டுள்ளது: ஆஸ்திரேலியா, புருனே தருசலாம், பிஜி, இந்தியா, இந்தோனேசியா, ஜப்பான், கொரியா குடியரசு, மலேசியா, நியூசிலாந்து, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, ஐக்கிய நாடுகள் மாநிலங்கள் மற்றும் வியட்நாம்.

- இந்தியா மற்றும் கஜகஸ்தான் நாடுகளின் 5வது பயங்கரவாத தடுப்பு கூட்டு பணிக்குழுக் கூட்டம் கஜகஸ்தானின் தலைநகரம் அஸ்தானாவில் நடைபெற்றது.

- உலகின் முதல் அணுசக்தி உச்சி மாநாடு பெல்ஜியம் தலைநகரம் பிரஸ்ஸல்ஸில் நடைபெற்றது , இது அணுசக்தியை ஊக்குவிக்கும் நோக்கில் சர்வதேச அணுசக்தி நிறுவனம் (IAEA) மற்றும் பெல்ஜியம் இணைந்து ஏற்பாடு செய்தது .

- இந்திய ராணுவத் தளபதி ஜெனரல் மனோஜ் பாண்டே உஸ்பெகிஸ்தானில் உள்ள ஆயுதப்படைகளின் அகாடமியில் உயர் தொழில்நுட்ப தகவல் தொழில்நுட்ப ஆய்வகத்தை திறந்து வைத்துள்ளார்.
    - இந்த ஆய்வகம் இந்திய உதவியுடன் நிறுவப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

- இந்தியா சமீபத்தில் பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு பிரம்மோஸ் மீயொலி சீர்வேக எறிகணைகளை வழங்கியுள்ளது. இந்தியா மற்றும் ரஷ்யா இடையேயான ஒரு கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்ட எறிகணையினை இந்தியா ஏற்றுமதி செய்யும் முதல் நாடு பிலிப்பைன்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது.
    - பிரம்மபுத்திரா மற்றும் மோஸ்க்வா (ரஷ்யா) ஆகிய நதிகளின் பெயரால் பிரம்மோஸ் என்று பெயரிடப்பட்டது.

- DUSTLIK கூட்டு இராணுவ பயிற்சி இந்தியா உஸ்பெகிஸ்தான் கூட்டு ராணுவப் பயிற்சியான DUSTLIK இன் 5வது பதிப்பிற்காக இந்திய ராணுவக் குழு இன்று உஸ்பெகிஸ்தான் சென்றுள்ளது.
    - உஸ்பெகிஸ்தான் குடியரசின் டெர்மேஸில் 2024 ஏப்ரல் 15 முதல் 28 வரை இந்தப் பயிற்சி நடத்தப்பட உள்ளது.

## நியமனங்கள்

- ஐபிஎஸ் சதானந்த் வசந்த் தேசிய புலனாய்வு முகமையின்(NIA) தலைமை இயக்குநராகவும், ஐபிஎஸ் பியூஷ் ஆனந்த் தேசிய பேரிடர் மீட்புப் படையின் இயக்குநராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- இந்தியாவுக்கான பிரிட்டன் தூதராக இருக்கும் அலெக்ஸ் எல்லிஸ் வேறு தூதரக பணிக்கு மாற்றப்பட்டிருப்பதால், புதிய தூதராக லிண்டி கேமரூனை பிரிட்டன் அரசு நியமித்துள்ளது.

- ஐக்கிய நாடுகள் சபையின் பல முக்கிய அமைப்புகளுக்கு இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது, குறிப்பாக அதிக எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்று சர்வதேச போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு மூன்றாவது முறையாக ஜக்ஜித் பவாடியா தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
    - இரகசிய வாக்கெடுப்பு மூலம் தேர்நதெடுக்கப்பட்டுள்ள திரு. பவாடியா, மார்ச் 2025-2030 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு INCB-இன் தலைவராக செயல்படுவார்.

- இந்திய கடற்படையின் புதிய தலைமை தளதிபதியாக தினேஷ் திரிபாதி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

- திருமதி ஷெய்பாலி பி. ஷரண், பத்திரிகை தகவல் அலுவலகத்தின் முதன்மை தலைமை இயக்குநராக பொறுப்பேற்றுள்ளார்.
    - பத்திரிகை தகவல் பணியகம் ஜூன் 1919 இல் நிறுவப்பட்டது.

- பதினாறாவது நிதிக்குழுவின் முழுநேர உறுப்பினராக பொருளாதார நிபுணர் மனோஜ் பாண்டாவை நியமிப்பதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
    - 16வது நிதி ஆணையத்தின் தலைவர் - அரவிந்த் பனகாரியா
    - நிதி ஆணையம் சரத்து 280.
    - மாநில நிதி ஆணையம் சரத்து 243 I

- உச்ச நீதிமன்றமானது நீதிபதி அனிருத்தா போஸ் என்பவரை போபால் நகரில் உள்ள உள்ள தேசிய நீதித்துறை அகாடமியின் (NJAC) இயக்குநராக நியமித்துள்ளது.

- நாட்டின் பயங்கரவாத எதிர்ப்புப் படையான தேசிய பாதுகாப்புப் படையின் (NSG) இயக்குநராக மூத்த ஐபிஎஸ் அதிகாரி நளின் பிரபாத் நியமிக்கப்பட்டுள்ளார்.

- இந்திய ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநராக உள்ள டி ரபி சங்கரை, மே 3, 2024 முதல் ஒரு வருட காலத்திற்கு மீண்டும் நியமிக்க அமைச்சரவையின் நியமனக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
  - ரிசர்வ் வங்கியின் ஆளுநர் - சக்திகாந்த தாஸ்

## விருதுகள்

- 2024 ஆண்டுக்கான மா.அரங்கநாதன் விருது தெ.ஞானசுந்தரம், கு.வெ.பாலசுப்பிர மணியன் ஆகியோருக்கு வழங்கப்படவுள்ளது.
  - `முன்றில்‘ என்ற இலக்கிய சிற்றிதழை நடத்திவந்த எழுத்தாளர் மா.அரங்கநாதனின் நினைவையொட்டி ஆண்டுதோறும் ஏப்ரல் 16ம் தேதி ‘மா. அரங்கநாதன் இலக்கிய விருது’ முன்றில் இலக்கிய அமைப்பு சார்பில் வழங்கப்பட்டு வருகிறது. இலக்கியத் துறையில் பல ஆண்டுகளாகப் பங்களித்து வரும் சிறந்த படைப்பாளிகள் இருவருக்கு அவர்களுடைய ஒட்டு மொத்த இலக்கியப் பங்களிப்பு மற்றும் படைப்புகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இவ்விருது வழங்கப்படுகிறது.

- இந்திய பதிப்பு துறையில் சிறந்து விளங்குவோருக்கு அளிக்கப்படும், கோவாவை சேர்ந்த, ‘பப்ளிஷிங் நெக்ஸ்ட்’ அமைப்பின் கடந்தாண்டுக்கான சிறந்த பதிப்பகத்துக்கான விருது, தமிழ் பதிப்பகமான ‘காலச்சுவடு’க்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
  - இந்த விருதை, இதே காலச்சுவடு பதிப்பகம், 2018லும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

- இந்தியாவின் 2வது பெரிய டெலிகாம் சேவை நிறுவனமான ஏர்டெல்-ன் தாய் நிறுவனமான பார்தி ஏர்டெல் நிறுவனர் மற்றும் தலைவர் சுனில் பார்தி மிட்டலுக்கு, இந்திய-பிரிட்டிஷ் வணிக உறவுகளை வலுப்படுத்தியமைக்காக, பிரிட்டிஷ் மன்னர் மூன்றாம் சார்லஸ் ஆல், கே.பி.இ எனப்படும் Knight Commander விருது அறிவிக்கப்பட்டு உள்ளது.

- 15-வது கட்டுமானத் தொழில் மேம்பாட்டு கவுன்சிலின்(CIDC) விஸ்வகர்மா விருதுகள் பல்வேறு பிரிவுகளில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.
  - தொழில்துறையுடன் இணைந்து மத்திய அரசால் நிறுவப்பட்ட கட்டுமானத் தொழில் மேம்பாட்டு கவுன்சில் (CIDC), இந்திய கட்டுமானத் துறையின் பல்வேறு கூறுகளை தீவிரமாக ஈடுபடுத்தும் பிரதிநிதி அமைப்பாக செயல்படுகிறது.

- கேன்ஸ் திரைப்பட விழாவின் உச்ச அங்கீகாரமான ‘கோல்டன் பாம் / தங்கப்பனை ’ (Palme d’Or) விருதுக்கான போட்டி பிரிவில் கடந்த 40 ஆண்டுகளில் முதல் முறையாக இந்திய இயக்குநர் பாயல் கபாடியாவின் ‘ஆல் வி இமேஜின் ஏஸ் லைட்’ (All we imagine as light ) எனும் திரைப்படம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
  - இத்திரைப்படமானது கடற்கரை நகரை நோக்கிய சாலைப் பயணத்தில் ஒரு மாய

வனப்பகுதியை எதிர்கொள்ளும் 2 செவிலியர்கள், தங்களின் கனவை நனவாக்கிக் கொள்கின்றனர் என்று கற்பனைக் களத்துடன் கூடிய பயணக் கதையாகும்.

- 61வது தேசிய கடல்சார் தினத்தின் போது, கடல்சார் துறையில் ஆற்றப்பட்ட சீரியப் பங்களிப்புகளை அங்கீகரிப்பதற்காக சாகர் சம்மான் விருதுகள் வழங்கப்பட்டன.
  - **இதில் விருது பெற்றவர்கள்**
  - சாகர் சம்மான் வருணா விருது: ஸ்ரீ. திரேந்திர குமார் சன்யால்
  - சிறந்த பங்களிப்பிற்கான சாகர் சம்மான் விருது: கேப்டன் கமல் காந்த் சௌத்ரி
  - துணிச்சல் மிகு பங்களிப்பிற்கான சாகர் சம்மான் விருது: கேப்டன் சுபிர்சாஹா, கேப்டன் O.M. தத்தா.
  - திறன் சார் கல்விப் படிப்புகளை வழங்கும் கடல் சாராப் பயிற்சி வழங்கீட்டு நிறுவனங்கள் பிரிவில்,
  - இந்துஸ்தான் கடல்சார் பயிற்சி நிறுவனம், டைடல் பார்க், திருவான்மியூர், சென்னை முதல் இடத்தைப் பிடித்தது.
  - இந்துஸ்தான் கடல்சார் பயிற்சி நிறுவனம், கீழ்ப்பாக்கம், சென்னை 2வது இடத்தினைப் பெற்றுள்ளது.
  - FOSMA கடல்சார் கல்வி நிறுவனம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள், கொல்கத்தா ஆனது 3வது இடத்தைப் பெற்றுள்ளது.

- பெங்களூருவைச் சேர்ந்த கன்னடக் கவிஞர், எழுத்தாளர், கல்வியாளர் மற்றும் ஆர்வலர் மம்தா ஜி. சாகர், இலக்கிய உலகிற்கு அவர் ஆற்றிய பங்களிப்பிற்காக சமீபத்தில் உலக எழுத்தாளர்களின் அமைப்பு (WOW) வழங்கும் உலக இலக்கியப் பரிசை வென்றுள்ளார்.

- ஜெயின் ஆச்சார்யா லோகேஷ் முனி, அமெரிக்க ஜனாதிபதியின் தங்க தன்னார்வ சேவை விருதைப் பெற்ற முதல் இந்திய துறவி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

- செந்தில் குமரன் – உலக பத்திரிக்கை புகைப்படத்திற்கான விருது 2022 (இவ்விருதினை பெறும் முதல் தென்னிந்தியர்).

- தில்லி பல்கலைக்கழகத்தின் காளிந்தி கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் மீனா சரண்டாவுக்கு 2024 ஆம் ஆண்டிற்கான 'சர்வதேச கலாச்சார விருது' வழங்கப்பட்டது பேராசிரியர் மீனா சரண்டா அவர்கள் கல்வி மற்றும் சமூக சேவையில் ஆற்றிய அளப்பரிய பணிக்காக இந்த விருது பெற்றுள்ளார்.

- ஜான் எல். 'ஜாக்' ஸ்விகர்ட் ஜூனியர் விருது சந்திரயான்-3 குழுவானது விண்வெளி ஆய்வுக்கான மதிப்புமிக்க 2024 ஜான் எல். 'ஜாக்' ஸ்விகர்ட் ஜூனியர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

- வாழ்நாள் முழுவதும் இந்தியாவில் விண்வெளி அறிவியலை ஊக்குவிப்பதில் பெரும்

DHEERAN IAS ACADEMY

பங்காற்றியதற்காக Ananth Technologies இன் நிறுவனர், CEO மற்றும் தலைவர் பவுலூரி சுப்பா ராவிற்கு, இந்தியாவின் ஏரோநாட்டிக்கல் சொசைட்டி (ASI) மூலம் மதிப்புமிக்க 'ஆர்யபட்டா விருது' வழங்கப்பட்டுள்ளது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் காப்புநிலை புத்தொழில் நிறுவனமான ImmunoACT, புற்றுநோய் சிகிச்சைக்காக NexCAR 19 என்ற CAR-T செல் சிகிச்சை மருந்தை உருவாக்கியுள்ளது.
    - CAR-T செல் சிகிச்சை என்பது புற்றுநோய் செல்களை எதிர்த்துப் போராடும் வகையில் நோயாளியின் T செல்களை மரபணு ரீதியாக மாற்றியமைக்கும் செயல் முறையை உள்ளடக்கிய புற்றுநோய் சிகிச்சையின் ஒரு புதுமையான வடிவமாகும்.
    - NexCAR 19 நிணநீர்க் குழியப் புற்றுநோய் மற்றும் இரத்தப் புற்றுநோய் போன்ற இரத்த புற்றுநோய் வகைகளின் சிகிச்சைக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

- தென் கொரியாவின் 'செயற்கை சூரியன்'
    - கொரியாவின் மேம்பட்ட அணுக்கரு இணைவு சோதனைக்கான ஆராய்ச்சி (KSTAR) சாதனத்தின் அணுக்கரு இணைவு உலையைப் பயன்படுத்தி 48 வினாடிகளுக்கு 100 மில்லியன் டிகிரி செல்சியஸ் பிளாஸ்மா வெப்பநிலையை உருவாக்கியுள்ளனர்.
    - இந்த வெப்பநிலையானது சூரியனின் மையப்பகுதியில் உள்ள 15 மில்லியன் டிகிரி செல்சியஸ் என்ற வெப்ப நிலையை விட ஏழு மடங்கு அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.
    - KSTAR- Korea Superconducting Tokamak Advanced Research
    - சமீபத்தில் தென் கொரியா தனது நாட்டிற்காக 2வது இராணுவ உளவு செயற்கைக் கோளை வெற்றிகரமாக விண்ணுக்கு செலுத்தியுள்ளது.

- வியாழன் கோளின் முக்கியமான துணைக்கோளான கலிஸ்டோவில்(Callisto or Jupiter IV) ஓசோன் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதன்மூலம் அங்கு ஆக்ஸிஜன் இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.
    - கேனிமேட் மற்றும் டைட்டனுக்கு அடுத்தப்படியாக சூரிய குடும்பத்தில் உள்ள மூன்றாவது பெரியத் துணைக்கோள் கலிஸ்டோ ஆகும்.
    - வியாழனுக்கு 95 நிலவுகள் உள்ளன , அவை சர்வதேச வானியல் ஒன்றியத்தால் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

- நிலவின் துருவப் பகுதிகளில் வாழ்வியலுக்கு சாத்தியமான செயல்பாடுகள் மற்றும் நீர்-பனி சார் வளங்கள் உள்ளனவா என்பது குறித்து ஆராய LUPEX என்ற பெயரில் இஸ்ரோ மற்றும் ஜப்பானின் விண்வெளி ஆய்வு நிறுவனம் ஆகியவை இணைந்து செயல்பட உள்ளன.
    - LUPEX = Lunar Polar Exploration Mission
    - ISRO

- 1960-களில் இந்திய விண்வெளித் திட்டத்தின் நிறுவனர் டாக்டர் விக்ரம் சாராபாயின் கீழ் இந்தியாவில் விண்வெளி ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.
- INCOSPAR (Indian National Committee for Space Research) டாக்டர் சாராபாய் மற்றும் டாக்டர் ராமநாதன் தலைமையில் தொடங்கப்பட்டது.
- இஸ்ரோ ஆகஸ்ட் 15, 1969 இல் உருவாக்கப்பட்டது மற்றும் விண்வெளி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் விரிவாக்கப்பட்ட பங்கைக் கொண்டு INCOSPAR ஐ மாற்றியது

➢ சூரிய குடும்பத்தில் புதியதாக மூன்று துணைக்கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. யுரேனஸ்க்கு ஒரு துணைக்கோளும் நெப்டியூனுக்கு இரண்டு துணைக்கோள்களும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- யுரேனசின் துணைக்கோள் – S/2023 U1
- நெப்டியூன் துணைக்கோள் – S/2002 N5, S/2021 N1

➢ WHO ஆல் பரிந்துரைக்கப்பட்ட Men5CV/MenFive கான்ஜுகேட் தடுப்பூசியை வழங்கும் முதல் நாடு நைஜீரியா ஆகும், இது மெனிங்கோகோகல் பாக்டீரியாவின் (Meningococcal Bacteria) ஐந்து விதமான பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கிறது.

➢ நீண்ட தூரம் இலக்குகளை தாக்கி அழிக்கும் க்ரூஸ் ஏவுகணையானது ஒடிசாவின் சாந்திப்பூர் ஒருங்கிணை சோதனை மையத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

- DRDO – Defence Research and Development Organisation 1958 இல் நிறுவப்பட்டது.

➢ சுகன்யான் திட்டம் – இந்திய விண்வெளி வீரர்கள் பூமியிலிருந்து 400 கி.மீ தொலைவிற்கு அனுப்பி பின் பூமிக்கு திருப்பி கொண்டு வரப்படும் திட்டம்

- 2008 – சந்திராயன் I திட்டம்
- 2019 – சந்திராயன் II திட்டம்
- 23.08.2023 – சந்திராயன் III திட்டம்

➢ ஐரோப்பிய விண்வெளி முகமை சமீபத்தில் கையா-BH3(GAIA-BH3) எனபெயரிடப்பட்ட மிகப்பெரிய நட்சத்திர கருந்துளையை அடையாளம் கண்டுள்ளது.

➢ நாசா நிறுவனம் ஆனது. சர்வதேச மற்றும் தனியார் பங்குதாரர்கள் குழுவுடன் இணைந்து, நிலவிற்கான (லூனார் கேட்வே) விண்வெளி நிலையம் எனப்படும் சிறிய விண்வெளி நிலையத்தை உருவாக்க திட்டமிட்டுள்ளது.

➢ 2047ஆம் ஆண்டுக்குள் அணுசக்தி உற்பத்தியை தற்போதைய 8,000 மெகாவாட்டிலிருந்து 1 லட்சம் மெகாவாட்டாக உயர்த்த இந்தியா இலக்கு வைத்துள்ளது.

- தாராபூர் அணுமின் நிலையம் இந்தியாவின் முதல் வணிக அணுமின் நிலையமாகும்.

DHEERAN IAS ACADEMY

- ஐரோப்பிய ஒன்றியத்தின் உள்கட்டமைப்பு ELI திட்டத்தின் ஒரு பகுதியான ருமேனியாவில் உள்ள ஒரு ஆராய்ச்சி மையத்தின் கட்டுப்பாட்டு அறையில், பொறியாளர் அன்டோனியா டோமா உலகின் மிக சக்திவாய்ந்த லேசரை உருவாக்கியுள்ளார்.
  - இது சுகாதாரத் துறை முதல் விண்வெளி வரை அனைத்திலும் புரட்சிகர முன்னேற்றங்களை ஏற்படுத்தும்.

- உலக வானிலை நாள் (மார்ச் 23 ) அனுசரிப்பின் ஒரு பகுதியாக, INDRA எனப்படுகின்ற மற்றும் உள்நாட்டிலேயே நன்கு உருவாக்கப்பட்ட ஒரு கைபேசிச் செயலியானது (வானிலை பகுப்பாய்விற்கான இந்தியக் கடற்படையின் மாறுநிலை வளம்) தொடங்கப்பட்டது.

- கோப்ரினோப்சிஸ் சினிரியா
  - இந்திய வேளாண் ஆராய்ச்சிச் சபையின் மத்தியத் தோட்டப் பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குழுவானது, கோப்ரினோப்சிஸ் சினிரியா என்ற புதிய உண்ணக் கூடிய காளான் இனத்தினை அடையாளம் கண்டு உள்ளது.

- மைக்ரோ பிளாஸ்டிக்கால் ஏற்படும் அச்சுறுத்தலை எதிர்த்துப் போராடுவதற்கான முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில், இந்திய அறிவியல் கழகத்தின் (ஐஐஎஸ்சி) ஆராய்ச்சியாளர்கள், இந்த மாசுகளை நீரிலிருந்து அகற்றுவதற்கு நிலையான ஹைட்ரஜலை வடிவமைத்துள்ளனர்.

- ராக்கெட் என்ஜின்களுக்கான இலகுரக கார்பன்-கார்பன் (சிசி) முனையை உருவாக்கி, பேலோட் திறனை மேம்படுத்துவதன் மூலம் ராக்கெட் என்ஜின் தொழில்நுட்பத்தில் ஒரு திருப்புமுனையை எட்டியுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) மிக உயர்ந்த அச்சுறுத்தல் நிலை 6 க்கு எதிராக பாதுகாப்பிற்காக இலகுவான குண்டு துளைக்காத ஜாக்கெட்டை உருவாக்கியுள்ளது.

- புவி நாள் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில் (CSIR), புது தில்லியின் ரஃபி மார்க்கில் உள்ள CSIR தலைமையக கட்டிடத்தில் இந்தியாவின் மிகப்பெரிய காலநிலை கடிகாரத்தை நிறுவி செயல்படுத்தியுள்ளது.
  - உலக புவி நாள் - ஏப்ரல் 22

- கேரளாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், ஃபேர்னஸ் க்ரீம்களின் தொடர்ச்சியான பயன்பாடு நெஃப்ரோடிக் சிண்ட்ரோமுடன் தொடர்புடையதாக தெரிவித்துள்ளனர். நெஃப்ரோடிக் சிண்ட்ரோம் என்பது சிறுநீரகக் கோளாறு ஆகும்.
  - இது குளோமருலி அழற்சியின் காரணமாக சிறுநீரில் அதிகப்படியான புரதத்தை ஏற்படுத்துகிறது

DHEERAN IAS ACADEMY

# அறிக்கைகள்

- 2024-ஆம் ஆண்டின் 200 இந்திய கோடீஸ்வர்களின் பட்டியலை ஃபோர்ப்ஸ் வெளியிட்டுள்ளது. இந்த பட்டியலில் முகேஷ் அம்பானி (ரூ.9.62 லட்சம் கோடி) முதலிடமும், கவுதம் அதானி (ரூ.6.97 லட்சம் கோடி) இரண்டாம் இடமும், 3-வது இடத்தில் ஷிவ் நாடார் (ரூ.3.07 லட்சம் கோடி), 4-வது இடத்தில் சாவித்ரி ஜிண்டால் (ரூ.2.78 லட்சம் கோடி), 5-வது இடத்தில் திலிப் ஷங்வி (ரூ.2.2 லட்சம் கோடி) உள்ளனர்.
  - உலகளாவிய பில்லியனர்கள் வரிசையில், லூயி உட்டான் நிறுவனத்தின் பெர்னார்ட் அர்னால்ட் முதல் இடத்திலும், 2-வது இடத்தில் டெஸ்லா நிறுவனர் எலான் மஸ்க்ம் உள்ளனர்.
  - உலகளாவிய பட்டியலில் முகேஷ் அம்பானி 9-வது இடத்திலும், கவுதம் அதானி 17-வது இடத்திலும் உள்ளனர்.

- Unicorn Index 2024
  - சமீபத்திய Hurun Global Unicorn Index 2024 இன் படி, இந்தியாவில் தற்போது 67 யூனிகார்ன்கள் கொண்டு யூனிகார்ன்களுக்கான உலகின் மூன்றாவது பெரிய மையமாக நாடு தனது நிலையைத் தக்க வைத்துக் கொண்டது.
  - யுனிகார்ன் என்பது $1 பில்லியனுக்கும் மேலான மதிப்பைக் கொண்ட ஒரு தனியார் தொடக்க நிறுவனத்தை விவரிக்க துணிகர மூலதனத் துறையில் பயன்படுத்தப்படும் ஒரு சொல் ஆகும் .

- இணையவழி அச்சுறுத்தல்கள் குறியீடு
  - நாடு வாரியாக இணையவெளிக் குற்றங்கள் தொடர்பான பல அச்சுறுத்தல்களை தர வரிசைப் படுத்தும் அறிக்கையில் ரஷ்யா முதலிடத்தில் உள்ளது. இந்தியா 10-ஆவது இடத்தில் உள்ளது.

- ஏர்போர்ட்ஸ் கவுன்சில் இன்டர்நேஷனல் (ஏசிஐ) வேர்ல்ட், விமான நிலைய தரநிலைகளை மதிப்பிடும் ஒரு சர்வதேச அமைப்பானது, 2023 ஆம் ஆண்டில் உலகளவில் மிகவும் பரபரப்பான விமான நிலையங்களில் டெல்லியின் இந்திரா காந்தி சர்வதேச (ஐஜிஐ) விமான நிலையத்தை 10வது இடத்தில் தரவரிசைப்படுத்தியுள்ளது.

DHEERAN IAS ACADEMY

# விளையாட்டு நிகழ்வுகள்

- தாய்லாந்தில் உள்ள புக்கெட் நகரில் சர்வதேச பளுதூக்குதல் கூட்டமைப்பு சார்பில், உலகக் கோப்பை பளுதூக்கும் தொடர் நடத்தப்பட்டு வருகிறது. இதில் மகளிருக்கான 49 கிலோ எடைப் பிரிவில் டோக்கியோ ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற இந்தியாவின் மீராபாய் சானு 3-வது இடம் பிடித்தார்.
  - இதன் மூலம் ஜூலை மாதம் நடைபெற உள்ள பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெறுவதை உறுதி செய்துள்ளார் மீராபாய் சானு.

- சர்வதேச ஹாக்கி சம்மேளத்தின் புதிய தடகளக குழுவின் இணைத் தலைவர்களாக (co-chairs) சிலி நாட்டை சேர்ந்த ஹாக்கி வீராங்கனை கமிலா கேரம் மற்றும் கேரளாவை சேர்ந்த இந்திய ஹாக்கி அணியின் கோல்கீப்பர் பரட்டு ரவீந்திரன் ஸ்ரீஜேஷ் (PR Sreejesh) நியமிக்கப்பட்டுள்ளனர்.

- இந்திய உணவுக்கழகத்தின் மண்டல பொது மேலாளரும், முன்னாள் ஓட்டப்பந்தய வீராங்கனையுமான கேரளாவை சேர்ந்த ஷைனி வில்சன் ஆசிய விளையாட்டு ஆணையத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் 2024 முதல் 2028 வரை நான்கு ஆண்டு காலத்திற்கு உரியதாகும்.

- 2024ஆம் ஆண்டு மாண்டினீக்ரோவின் புத்வாவில் நடைபெற்ற இளைஞர் உலக குத்துச்சண்டை கோப்பையில் ஐந்து தங்கப் பதக்கங்கள், ஒன்பது வெள்ளிப் பதக்கங்கள், 12 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 26 பதக்கங்களை இந்திய அணி வென்று இரண்டாம் இடத்தைப் பிடித்தனர்.
  - ரஷ்யா எட்டு தங்கப் பதக்கங்களுடன் முதலிடத்தைப் பிடித்தது.

- அமெரிக்காவில் நடந்த மியாமி ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆண்கள் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோகன் போபண்ணா – ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் ஜோடி சாம்பியன் பட்டத்தை வென்றது.

- ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்கு எதிரான 19ஆவது ஐபிஎல் லீக் போட்டியில் விராட் கோலி 34 ரன்கள் எடுத்த போது ஐபிஎல் கிரிக்கெட் வரலாற்றில் 7500 ரன்களை கடந்த முதல் வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.
  - முன்னதாக ஐபிஎல் போட்டிகளில் முதல் வீரராக 100 ரன்கள் எடுத்த வீரர் என்ற சாதனையையும் படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

- இந்த ஆண்டு ஜூலை 26 முதல் ஆகஸ்ட் 11 வரை பாரிஸில் நடைபெறவிருக்கும் கோடைகால ஒலிம்பிக்கில், ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த பில்கிஸ் மிர், இந்தியாவிலிருந்து ஜூரி உறுப்பினராகப் பணியாற்றி முதல் பெண் என்ற வரலாறு படைக்க உள்ளார்.

- ஆறு முறை உலக சாம்பியனான குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம், பாரிஸ் ஒலிம்பிக்குக்குச் செல்லும் இந்திய வீரர்கள் குழுவுக்கான தலைமை பொறுப்பில் இருந்து தனிப்பட்ட காரணங்களினால் விலகுவதாக அறிவித்துள்ளார்.

DHEERAN IAS ACADEMY

- சென்னையை சேர்ந்த டேபிள் டென்னிஸ் வீரர் சரத் கமல் பாரிஸ் ஒலிம்பிக் 2024 இல் இந்திய ஒலிம்பிக் குழுவின் கொடி ஏந்திச் செல்பவராக இந்திய ஒலிம்பிக் சங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

- உலக சாம்பியனுடன் விளையாட உள்ள வீரரை தேர்வு செய்யும் கேண்டிடேட் செஸ் தொடர் கனடாவின் டொராண்டா நகரில் நடைபெற்றது. இந்த தொடரில் இந்திய கிராண்ட் மாஸ்டரான டி.குகேஷ் சாம்பியன் பட்டத்தை வென்றார்.

- முன்னாள் இந்திய ஹாக்கி வீரரும், துரோணாச்சார்யா. விருது பெற்றவருமான ஹரேந்திர சிங், மூத்த தேசிய மகளிர் ஹாக்கி அணியின் பயிற்சியாளராக ஹாக்கி இந்தியாவால் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

- காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற நரசிங் பஞ்சம் யாதவ், ஐக்கிய உலக மல்யுத்தம் நிர்ணயித்த தேவையை பூர்த்தி செய்து, ஏப்ரல் 24 அன்று இந்திய மல்யுத்த சம்மேளனத்தின் தடகள ஆணையத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) இந்திய ஜாம்பவான் யுவராஜ் சிங்கை ஐசிசி ஆடவர் டி20 உலகக் கோப்பை 2024 தூதராக அறிவித்தது. இது ஜூன் 1 முதல் 29 வரை மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்காவில் நடத்தப்படுகிறது.

- பாரீஸ் ஒலிம்பிக் பாய்மர படகு போட்டியில் தமிழகத்தின் நேத்ரா குமணன் தகுதி பெற்றுள்ளார்.
  - பிரான்ஸ் தலைநகர் பாரீசில் 33-வது ஒலிம்பிக் போட்டிகள் ஜூலை 26-ம் தேதி துவங்குகிறது

## முக்கிய தினங்கள்

- ஆட்டிசம் என்பது மூளை வளர்ச்சியைப் பாதிக்கும் ஒரு சிக்கலான நோய். இதனால், சமூக இணக்கம், பேச்சு, நடத்தை, மனநலம், கூடி விளையாடுதல் போன்றவற்றில் குறைபாடுகள் ஏற்படுகின்றன. குறிப்பிட்ட சில செயல்களை மட்டும் மீண்டும் மீண்டும் செய்துகொண்டே இருப்பது இதன் முக்கிய அம்சம். ஒரு வயது முதல் மூன்று வயதிற்குள் பெரும்பாலும் கண்டறியப்படுகிறது.
  - Theme: Empowering Autistic Voices

- இந்தியாவின் கடல்சார் மாலுமிகளின் சேவைகளை கௌரவிக்கவும் கடல்சார் வரலாற்றின் பெருமைகளை நினைவு கூறவும் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 5 -ல் தேசிய கடல்சார் தினம் கொண்டாடப்படுகிறது.

- உலக சுகாதார தினம் (WHD), 1948 இல் WHO நிறுவப்பட்ட ஆண்டு நிறைவைக் குறிக்கும்

வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 7 அன்று அனுசரிக்கப்படுகிறது.

- இந்த ஆண்டுக்கான கருப்பொருள்: My Health, My Right

➢ துணிச்சல் தினம் - ஏப்ரல் 9

- ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 9 ஆம் தேதி, மத்திய ரிசர்வ் போலீஸ் படை (CRPF) தேசத்திற்கு தன்னலமின்றி சேவை செய்த துணிச்சலான வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் துணிச்சல் தினம் அல்லது வீரம் தினத்தை கொண்டாடுகிறது.

➢ உலக ஹோமியோபதி தினம்

- ஹோமியோபதியைக் கண்டுபிடித்தவரான ஜெர்மனியைச் சேர்ந்த டாக்டர் சாமுவேல் ஹானிமன் என்பவரது பிறந்த தினத்தை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் ஏப்ரல் 10 அன்று உலக ஹோமியோபதி தினம் அனுசரிக்கப் படுகின்றது.

➢ சர்வதேச மனித விண்வெளிப் பயண தினம்

- 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் தேதியன்று, சோவியத் ஒன்றியத்தினைச் சேர்ந்த யூரி ககாரின் என்பவர் முதன் முதலில் விண்வெளியில் பூமியைச் சுற்றி வந்தார்.
- மனிதர்களின் இந்த முதல் விண்வெளி பயணத்தை நினைவுகூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 12 சர்வதேச மனித விண்வெளிப் பயண தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- 1969 ஆம் ஆண்டு ஜூன் 20 ஆம் தேதியன்று, நீல் ஆம்ஸ்ட்ராங் நிலவில் கால் பதித்த முதல் நபர் என்பது குறிப்பிடத்தக்கது.
- இந்த ஆண்டிற்கான கருப்பொருள்: 'அறிவியல் ஆர்வத்தை ஊக்குவித்தல்'

➢ சமத்துவ நாள் - ஏப்ரல் 14

- சாதி, சமய வேறுபாடுகளை ஒழிப்பதில் அடையாளச் சின்னமாக விளங்கிய அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14ஆம் நாள் 'சமத்துவ நாளாக' கொண்டாடப்படுகிறது. சமத்துவ நாள் தமிழ்நாடு அரசால் 2022 இல் அறிவிக்கப்பட்டது.

➢ உலக பாரம்பரிய தினம் (World Heritage Day) அனுசரிக்கப்படும் தினம் ஏப்ரல் 18

➢ ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 21ஆம் தேதியை தேசிய குடிமைப் பணிகள் நாளாக இந்திய அரசு கொண்டாடி வருகிறது.

- நாட்டின் பொது நிர்வாகத்தில் பல்வேறு அரசு துறைகளில் பணியாற்றும் ஐ.ஏ.எஸ் (நிர்வாகம்), ஐ.பி.எஸ்.(காவல்துறை) மற்றும் ஐ.எஃப்.எஸ் (வனத்துறை) ஆகிய குடிமைப் பணி அதிகாரிகளின் பங்களிப்பை கௌரவிப்பதற்காக இந்த தேசிய குடிமைப் பணிகள் தினம் கொண்டாடப்படுகிறது.

➢ உலக பூமி தினம் ஏப்ரல் 22

- சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புவி எதிர்கொள்ளும் சவால்கள் குறித்த விழிப்பு உணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் உலக பூமி தினம் ஏப்ரல் 22 அன்று அனுசரிக்கப்படுகிறது. இத்தினம் 1970ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.
- இந்த ஆண்டுக்கான கருப்பொருள்: Planet vs. Plastics

➢ பஞ்சாயத்து ராஜ் தினம் - ஏப்ரல் 24

- 1993ஆம் ஆண்டு 73வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தினத்தை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் ஏப்ரல் 24ஆம் தேதி தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம் கொண்டாடப்படுகிறது.

➢ புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் பிறந்த நாளான ஏப்ரல் 29ஆம் நாள் ஆண்டு தோறும் தமிழ்க்கவிஞர் தினமாக கொண்டாடப்படுகிறது.

- இவரின் பிசிராந்தையார் நூலுக்கு சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டுள்ளது.